திரு. மொய்தீன் அவர்களைவிட நான் வயதில் சிறியவனாக இருப்பதால் அவர்களைவிட வேகமாகவும் சுறுசுறுப்பாகவும் எல்லாவிடங்களிலும் முயற்சி எடுத்திருக்கிறேன். அரசாங்கத்திற்கு மெஜாரிட்டி இருப்பதால் என் முயற்சிகள் தோல்வியடைந்தன. எங்கெங்கு முடியுமோ அங்கங்கு அப்போஸ் செய்திருக்கிறேன். முதலில் ஆர்டினன்ஸ் வந்தபோது அதை அப்போஸ் செய்தேன். மீண்டும் ஆர்டினன்ஸ் வந்தபோதும் அப்போஸ் செய்தேன். 'அட் எவ்வரி ஸ்டேஜ் அப்போஸ்' செய்திருக்கிறேன். இப்போதும் அப்போஸ் செய்கிறேன். ஆனால் தோல்விதான் அடையப்போகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: டாக்டர் ஹாண்டே அவர்கள் மிகுந்த உருக்கத்தோடு எதிர்த்து எதிர்த்துத் தோல்வி அடைந்திருக்கிறேன் என்று குறிப்பிட்டார்கள். இதில் யாரும் தோல்வி அடைந்ததாகக் கருத வேண்டாம். நாம் நிச்சயமாக அனைவரும் சேர்ந்து வெற்றி அடைய வேண்டும் என்பதற்காகத்தான் நம் தமிழ்நாட்டில் நான் ஏற்கனவே இந்த அவையில் தெரிவித்ததைப் போன்றும் சற்று முன்பு இந்த அவையில் நான் அறிவித்ததைப் போலவும், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறியதைப் போலவும், இந்திய தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இதை அகில இந்திய ரீதியில் சிந்திக்கவேண்டுமென்று முன்வந்திருக்கிறார்கள். நாம் இந்த மதுவிலக்கை ஒத்திவைப்பது, என்பதைச் சட்டமாகக் கொண்டு வந்திருக்கிற காரணத்தினால், அதை எதிர்த்து எதிர்க்கட்சியில் உள்ள காங்கிரஸ் கட்சியினரும், சுதந்திராக் கட்சியினரும், தோழமைக் கட்சியில் இருக்கின்ற முஸ்லீம் லீகைச் சேர்ந்தவர்களும் இங்கு பேசியிருக்கிற காரணத்தினால் அதற்குப் பதிலளிக்கக்கூடிய வகையில் இந்தியா முழுமைக்கும் இது சட்டமாக ஆக்கப்படுமானால் தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறது என்று கூறியதன் காரணமாகவும் அதை இந்தியத் தலைமை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டு யோசிக்கலாம் என்று கூறியிருப்பது நமக்குக் கிடைத்திருக்கிற முதல் கட்ட வெற்றியாகும்.

இந்த முதல் கட்ட வெற்றியோடு மட்டும் நிற்காமல் முழுமை பெறுவதற்கு இந்தியா முழுமையிலும் மதுவிலக்கு வரும் நன்னாளை எதிர்பார்ப்போம். இதில் வெற்றி தோல்வி என்ற பிரச்சினையே கிடையாது. மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டுமென்று சொன்னவர்கள் வெற்றி பெற்று விட்டார்கள் என்றும், மதுவிலக்கை ரத்து செய்கிற கொள்கை தவறானது, மது அருந்துவது தீதானது என்று சொல்லப்படுகிற கொள்கை தோற்றுவிட்டதாகவும் யாரும் கருத வேண்டாம். மதுவிலக்கு என்பது நாம் அனைவரும் ஏற்றுக்கொண்டிருக்கிற ஒரு புனிதமான கொள்கையாகும். அப்புனிதமான கொள்கை இந்தியா முழுவதிலும் வரவேண்டுமென்று பாடுபடுகிறோம்.

இப்போது பல்வேறு இடங்களில் இந்தக் கடைகள் வைக்கப்பட்டிருப்பதால், ஏற்பட்டிருக்கிற சில மனமாச்சாரியங்களையும், சட்ட மன்ற உறுப்பினர்கள் அதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிற விவரங்களும், அதற்காக அரசு எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகளும் பற்றி மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் இங்கு விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். நானும் கூறியிருக்கிறேன். இந்த மாநிலம் முழுவதும், எனக்குக் கிடைத்திருக்கிற

தகவல்களின்படி, சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் இவர்கள் விருப்பத்திற்கிணங்க 62 இடங்களில் கடைகள் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் பல இடங்களில் பொதுமக்கள் கோரிக்கைகள், சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் இவைகளை ஏற்று மாவட்ட ஆட்சித் தலைவர்களும் போலீஸ் அதிகாரிகளும் நிச்சயமாகச் செயல்படுவார்கள்.

கலெக்டர்களிடமிருந்து சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பதில் கிடைக்கவில்லை என்று சொல்லப்பட்டது. இங்கே அதை விளக்கியதன் மூலம் இனிமேல் கலெக்டர்கள் அந்தப் பதில்களை தக்க நேரத்தில் உரியவர்களுக்கு அனுப்புவார்கள். அனுப்பவேண்டும் என்று நான் இங்கு கூறிக்கொள்கிறேன். ஆனால் தவறான கருத்துக்களை மக்கள் உள்ளத்தில் பதிய வைத்து அரசாங்கத்திற்கு ஒரு களங்கத்தை ஏற்படுத்தவேண்டுமென்று எதிர்த்தரப்பிலுள்ளவர்கள் அல்லது மாற்றுக் கட்சிகளில் உள்ளவர்கள் முனையக் கூடாது என்பது என் வேண்டுகோளாகும்.

உதாரணமாக, மதுரை மாநகரத்தில் உத்தமர் காந்தி அடிகள் அன்று உடை மாற்றிக்கொண்ட அந்த வீட்டிலேயே கள்ளுக்கடை வைக்கப்பட்டிருக்கிறது என்று பலமாகப் பிரசாரம் நடைபெறுகிறது. ஆனால் அதை விசாரித்த பிறகு காந்தியடிகள் உடை மாற்றிக்கொண்ட அந்த இடத்தை இந்த அரசு 18—6—1971-ல் காதி போர்ட்டுக்கு வாங்கியிருக்கிறது என்ற தகவல் கிடைத்திருக்கிறது. ஆகவே தவறான பிரசாரமாகும் அது. அந்தத் தெருவில் ப்க்கத்து வீட்டில் கடை வைக்கப்பட்டிருப்பது என்னவோ உண்மை. ஆனால் செய்திகள் திரிக்கப்பட்டு, அரசாங்கத்திற்குக் களங்கம் கற்பிக்கவேண்டுமென்ற முறையில் அந்த வீட்டில் கள்ளுக்கடை வைக்கப்பட்டிருக்கிறது என்றெல்லாம் பேசப்படுகிறது. அப்படிப்பட்ட தவறான பிரசாரங்களை நிறுத்திக் கொள்ளவேண்டும்.

மதுவிலக்கை ஒத்திவைத்து அரசாங்கம் எடுத்திருக்கிற நடவடிக்கைகள் வேறு வழியில்லாது தவிர்க்க முடியாத சூழ்நிலையில் அரசு இந்த நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதை மனமார ஒப்பி இந்தச் சட்டத்திற்கான ஆதரவைக் காட்ட வேண்டும், எடுத்துக்கொள்கிற முயற்சிகளுக்கு எல்லாத் தரப்பிலுள்ள எல்லா கட்சி உறுப்பினர்களும் ஒத்துழைப்பு தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு மதுவிலக்கு (செல்திறனை நிறுத்திவைத்தல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 36/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேறியதாக அறிவிக்கப்பட்டது.